

தந்தை பெரியாரின் 147 –வது பிறந்த நாளையொட்டி, கரூரில் உள்ள தந்தை பெரியார் அவர்களின் சிலைக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.






தந்தை பெரியார் அவர்களின் 147ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (17.9.2025) கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சமூக நீதி நாள் உறுதி மொழி ஏற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, திருமதி க.சிவகாமசுந்தரி, மாநகராட்சி மேயர் திருமதி.வெ.கவிதா, மாவட்ட ஆட்சித் தலைவர் மீ.தங்கவேல், மாவட்ட வருவாய் அலுவலர் ம. கண்ணன், மாநகராட்சி ஆணையர் திருமதி கே.எம். சுதா மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## முரசொலி அறக்கட்டளை சார்பில் ‘முரசொலி செல்வம்’ விருது பெற்ற மூத்த பத்திரிகையாளர் ஏ.எஸ்.பன்னீர்செல்வனுக்குப் பாராட்டு!

# கரூர் மாவட்டத்திலிருந்து வெற்றிக் கணக்கைத் தொடங்குவோம்!

## கழக முப்பெரும் விழாவில் இளைஞரணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, செப். 19 -**

**கரூரில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் முரசொலி அறக்கட்டளை சார்பில் உரையாற்றிய கழக இளைஞரணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், முரசொலி அறக்கட்டளை சார்பில் முரசொலி செல்வம் விருதுபெறும் மூத்த பத்திரிகையாளர் ஏ.எஸ். பன்னீர்செல்வனைப் பாராட்டினார். அப்போது அவர் பேசுகையில், 2026 தேர்தலில் கழக வெற்றிக் கணக்கை கரூர் மாவட்டத்தில் இருந்து தொடங்குவோம் என்றார்.**

தி.மு.க. முப்பெரும் விழா. கரூரில், நேற்று முன்தினம் சீரும் சிறப்புமாக கோலாகலமாக நடைபெற்றது. இதில் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தி.மு. கழக முப்பெரும் விழா 2025 க்கான விருதுகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

முரசொலி அறக்கட்டளை சார்பில் வழங்கப்படும், `முரசொலி செல்வம்’ விருதை, கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிமுகம் செய்து வைத்து வாழ்த்திப் பேசினார்.

இதைத் தொடர்ந்து, இந்த ஆண்டுக்கான முரசொலி அறக்கட்டளை சார்பில், `முரசொலி செல்வம் விருது’ மூத்தபத்திரிகையாளர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. விருது பெற்ற ஏ.எஸ்.பன்னீர்செல்வன் அவர்களை கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

அப்போது அவர் ஆற்றிய அறிமுக உரை வருமாறு:-

முரசொலி செல்வம் மாமா விருது பெறும் திரு.ஏ.எஸ்.பன்னீர்செல்வன் அவர்கள் கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலம் பத்திரிகை துறையில் அனுபவம் பெற்றவர். `தி இந்து’, `பிசினஸ் இந்தியா’, `அவுட் லுக்’ போன்ற இந்தியாவின் தலைசிறந்த பத்திரிகைகளில் முக்கிய பொறுப்புகளில் பணியாற்றியவர். இங்கிலாந்தில் உள்ள ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் ரைட்டர்ஸ் ஃபெல்லோவாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்.



### அடுத்த தலைமுறை

ஒன்றிய, மாநில அரசின் உறவுகள் பற்றி விரிவான ஆய்வை மேற்கொண்டவர். 10 ஆண்டுகள் தெற்காசிய ஊடக வளர்ச்சி நிறுவனமான `பேனோஸ் சவுத் ஏசியா’வின் நிர்வாக இயக்குநராக ஏ.எஸ்.பன்னீர் செல்வன் அவர்கள் சிறப்பாக செயல்பட்டார்கள். `குளோபல் ஃபாரம் ஃபார் மீடியா டெவலப்மென்ட்’ துணைத் தலைவராக சிறப்பாகப் பணியாற்றியவர். இந்தியா முழுவதும் அடுத்த தலைமுறை இளைஞர்களை, பத்திரிகையாளர்களாக உருவாக்கிய பெருமைக்குச் சொந்தகாரர் தான் ஏ.எஸ்.பன்னீர்செல்வன் அவர்கள்.

தற்போது, நம் தமிழ்நாடு அரசு புதிதாக நிறுவியுள்ள சென்னை இதழியல் கலை நிறுவனத்தின் தலைமை இயக்கு நராக, சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். இவை அனைத்திற்கும் மேலாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூலை, `கலைஞர் தி லைஃப்’ என்று புத்தகமாக எழுதியவர்.

### `முரசொலி செல்வம் விருது’

முத்தமிழறிஞர் கலைஞரின் பெருவாழ்வை, தன் புத்தகத்தின் மூலமாக உலகமெங்கும் கொண்டு சேர்த்தவர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன் அவர்கள். அவருக்கு 2026 ஆம் ஆண்டிற்கான `முரசொலி செல்வம் விருது’ வழங்குவதில், முரசொலி அறக்கட்டளை மிகுந்த பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறது. இந்த நேரத்தில் அவருக்கு நம் வாழ்த்துகளையும், கர ஒலியையும் தெரிவித்துக் கொள்வோம்.

இங்கு விருது பெற்றுள்ள கழக துணைப் பொதுச்செயலாளர் அத்தை கனிமொழி கருணாநிதி, சுப.சீதாராமன், சோ.மா.இராமச்சந்திரன், குளித்தலை சிவராமன், மருதூர் இராமலிங்கம், பொங்கலூர் பழனிச்சாமி ஆகிய அனைத்து விருதாளர்களுக்கும் நம் வாழ்த்துகளையும், கைதட்டல்களையும் தெரிவித்துக் கொள்வோம்.

### கரூர் முப்பெரும் விழா

கழகத்திற்கு எவ்வளவோ சிறப்புகள் உண்டு. வரலாறு உண்டு. அந்த வரலாற்றின் வரிசையில் இந்த கரூர் முப்பெரும் விழாவும் நிச்சயம் இடம்பெறும். கலைஞர் அவர்கள் முதன்முதலாக நின்று, வென்ற இந்த கரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு தொகுதிகளிலிருந்து, 2026ல் கழகத்தின் வெற்றிக் கணக்கைத் தொடங்குவோம்.

வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு. நன்றி, வணக்கம்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

---

## தந்தை பெரியார் 147வது பிறந்தநாளை முன்னிட்டு

# கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சமூக நீதிநாள் உறுதிமொழி!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் ஏற்றனர்!

கரூர், செப். 19 -

தந்தை பெரியார் அவர்களின் 147ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சமூக நீதி நாள் உறுதி மொழி ஏற்றுக்கொண்டனர்.

தந்தை பெரியார் அவர்களின் 147ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.9.2025) கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தமிழ்நாடு முதலமைச் சர் அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளை சமூக நீதி தினமாக அறிவித்ததைத் தொடர்ந்து, தந்தை பெரியார் அவர்களின் சமூக நீதிப் பணிகளை நினைவு கூறும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் இன்றைய தினம் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தந்தை பெரியாரின் 147 வது பிறந்த நாளை முன்னிட்டு கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்ற அன்பு நெறியையும் “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற பண்பு நெறியையும் எனது வாழ்வியல் வழிமுறைகளாகக் கடைப்பிடிப்பேன்!

சுயமரியாதை ஆளுமைத் திறனும்பகுத்தறிவுப் பார்வையும் கொண்டவையாக என்னுடைய செயல்பாடுகள் அமையும்!

சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை ஒப்படைத்துக் கொள்வேன்!

மானுடத்தின் மீது பற்றையும் மனிதாபிமானத்தையும் என்றும் போற்றுவேன். சமூக நீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைத்திட இந்ந நாளில் உறுதியேற்கிறேன்!

எனும் சமூக நீதி உறுதிமொழியை அரசு அலுவலர்கள், பணியாளர்கள் ஏற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், ஆர்.இளங்கோ, திருமதி க.சிவகாமசுந்தரி, மாநகராட்சி மேயர் திருமதி. வெ.கவிதா, மாவட்ட ஆட்சித் தலைவர் மீ.தங்கவேல், மாவட்ட வருவாய் அலுவலர்கள் ம.கண்ணன், கு. விமல் ராஜ் (நிலமெடுப்பு), திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வீ.ரெ. வீரபத்தி ரன், மாநகராட்சி ஆணையர் திருமதி கே.எம். சுதா, கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் திருமதி. ஆர்.அபிராமி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி வேலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட 53,57 வார்டுகளில் “உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு முகாமில் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. நேரில் பார்வையிட்டு மனு அளித்த பயனாளிகளுக்கு சான்றிதழ் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

---

# மயிலத்தில் அண்ணாவின் திரு உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை - உறுதிமொழி ஏற்பு!

## செஞ்சி மஸ்தான் பங்கேற்பு!

*மைலம், செப் 19-*

*விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்ற தொகுதி வல்லம் மத்திய ஒன்றியம், தீவனூர்வடக்கு ஒன்றிய திமுக சார்பில் பேருந்து 117 ஆவது பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.*

*வல்லம் மத்திய ஒன்றிய திமுக சார்பில்ஒன்றிய செயலாளர் இளம்வழுதி ஏற்பாட்டில் வல்லம்பேருந்து நிலையம் அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப்படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சரு மான செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் என உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.*

*நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், வல்லம் தெற்கு ஒன்றிய செயலாளர் துரை, நிர்வாகி கள்லட்சுமி லட்சுமணன், பாண்டியராஜன், கதிரவன், மண்ணாங்கட்டி,முருகேசன், சகுந்தலா மகாலிங்கம், மலை யரசன்,பிரபா,உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் அணி அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ. கிருஷ்ணமூர்த்தி

**செப்டம்பர் 19 (2024)**



**இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**தியாகராயர் நகர் பகுதியில் கலைஞர் மற்றும் தளபதி மு.க.ஸ்டாலின் ஆகிய பொதுப் பணி மன்ற தலைவராகவும் – 122வது வட்ட பகுதி பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**